செ.வெ.எண் : 42 /ஜூலை நாள் : 19.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

# வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சிப் பணிகளை

# மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி பகுதியில் வேளாண்மைத் துறை மற்றும் வேளாண்மை சார்ந்த துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆப., அவர்கள் இன்று (19.07.2017) நேரடியாகச் சென்று ஆய்வு செய்து அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

ஆய்வு குறித்த விவரங்கள்:

நீடித்த மானாவாரி சாகுபடிக்கான திட்ட நுழைவு கட்டப் பணிகளின் கீழ் பரமக்குடி வட்டம், பாம்பூர் தொகுப்பு கிராமத்தில் உள்ள தென்பொதுவக்குடி கிராமத்தில் வெள்ளகோன் ஊரணி, பொன்னப்பகோன் ஊரணி தூர்வாரி ஆழப்படுத்தப்பட்டுள்ளது. தூர்வாரப்பட்ட மண் விவசாய நிலங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இப்பணியின் மூலம் பல ஆண்டுகளுக்குப்பின் இந்த ஊரணி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.

நபார்டு நிதியுதவியுடன் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பண்ணைக்குட்டைகளை ஆழப்படுத்துதல் திட்டத்தின்கீழ், கடந்த 2016-17ம் ஆண்டில் பரமக்குடி ஒன்றியம், பாம்பூர் கிராமத்தை சேர்ந்த திரு.சண்முகம், த/பெ.இருளன் என்பவருக்கு பண்ணைக்குட்டை வேளாண் பொறியியல் துறை மூலம் ரூ.49,808/- செலவில் வெட்டித் தரப்பட்டது. மேலும் இந்த திட்டத்தில் திரு.முனியசாமி, த/பெ. இருளன் என்பவருக்கு ரூ.41,055/- அரசின் முழு மானியத்தில் வெட்டித் தரப்பட்டது . இப்பண்ணைக்குட்டைகளில் மழைநீரை சேமித்து தமது நிலத்தில் உள்ள பயிர்களுக்கு தேவையான நேரத்தில் பயிர்களுக்கு உயிர்நீர் அளித்து நல்ல மகசூல் பெற இத்திட்டம் உதவி புரிகிறது.

பிரதம மந்திரி வேளாண் நீர் பாசனத் திட்டத்தின் கீழ் கடந்த 2016-17 ஆண்டில் பரமக்குடி வட்டம், தென்பொதுவக்குடி கிராமத்தில் உள்ள திரு. ராமு த/பெ. பெருமாள்சாமி என்பவரது நிலத்தில் ரூ.1.00 இலட்சம் மதிப்பிலான பண்ணைக்குட்டை புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதில் சேமிக்கும் மழைநீரை கொண்டு 5 ஏக்கர் நிலத்திற்கு பாசனம் செய்து கொள்ளலாம்.

அதேபோல, வேளாண்மை இயந்திரமயமாக்குதல் துணைத் திட்டத்தின் கீழ், 40 சதவீத மானியத்தில்,, கடந்த 2016-17ம் ஆண்டில் முதுகுளத்தூர் ஒன்றியம், புதுப்பட்டினம் கிராமத்தை சேர்ந்த திரு.ரமேஷ்குமார், த/பெ.முனியான்டி என்பவர், ரூ.26.47 இலட்சம் மதிப்பிலான 2 டிராக்டர்கள், 2 சுழல் கலப்பைகள், 1 வைக்கோல் கட்டும் கருவி, 2 பவர்டில்லர்கள், 2 விதைக்கும் கருவிகள், 1 திரும்பும் கலப்பை, மற்றும் 4 தெளிப்பான்கள் ஆகிய 14 கருவிகளை ரூ.10 இலட்சம் மானியத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் வழங்கப்பட்டது.

மேலும் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் திரு.பெரிய கருப்பன் த/பெ. சின்னசாமி, அரியனேந்தல் என்பவர் 2016-17 ஆம் ஆண்டிற்கு 1 ஏக்கரில் தீவனப் பயிர் வளர்க்க ஊழ4 கரணைகள் மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது. மேலும், வறட்சி நிவாரணத் திட்டம் 2016-17 ஆம் ஆண்டிற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் 205 விவசாயிகளுக்கு 300 ஏக்கரில் பயிரிட தீவனச் சோளம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் திரு.திருமாறன், த/பெ. குண்டுசாமி அரியனேந்தல் என்பவருக்கு தீவனச்சோள விதைகள் 50 சதவீத மானியமாக 1 ஏக்கரில் பயிரிட வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் நயினார்கோவில் வட்டாரம் நகரமங்களம் நீர்வடிப்பகுதியில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்நீர்வடிப்பகுதி மூவலூர், சின்ன நகரமங்களம், பெரிய நகரமங்களம், உதயக்குடி மற்றும் காரடந்தகுடி கிராமங்களை உள்ளடக்கியதாகும். இக்கிராமங்களில் மொத்தம் 12 ஊரணிகள், 3 கண்மாய்கள், 4 நீர்செறிவூட்டும் தண்டுகள், 2 கிராம குட்டைகள் ஆகியவை கிராம மக்களின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக காரடர்ந்தக்குடி கிராமத்தில் 3 ஊரணிகள் தூர்வாரும் பணிகள் முடிவடைந்துள்ளது. அவற்றில் சந்தைக்கூட்டம் ஊரணி மற்றும் தம்மம் /தர்மத்து ஊரணிகள் தலா ரூ.150000/- மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டு கிராம மக்களின் பொதுப்பயன்பாடு மற்றும் கால்நடைகள் பயன்பாட்டிற்காக உள்ளது.

பரமக்குடி தாலுகா, நயினார்கோயில் வட்டாரத்தில் மும்முடிச்சாத்தான் கிராமத்தில் திரு.அஹமது இப்ராஹிம் என்ற விவசாயி தனது சொந்த செலவில் 50 ஏக்கர் நிலம் வாங்கி அங்குள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்றி

நீர் பாசன வசதி அமைத்து பயன்தரும் மரச்செடிகளை நடவு செய்துள்ளார். அவர் தோட்டக்கலைத்துறை அதிகாரிகளின் அறிவுரையின் பேரில் சுயசெலவில் 15,000 PKM – 1 ரக புளியங்கன்றுகளை பெரியகுளம் தோட்டக்கலைக்கல்லூரியில் வாங்கி நடவு செய்து நன்கு பயன்பெற்று வருகிறார். இவர் தோட்டக்கலைத்துறையில் பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத்திட்டத்தின் கீழ் புளியங்கன்றுகளுக்கு 12.5 ஏக்கர் நிலத்திற்கு சொட்டு நீர் பாசனம் அமைத்து 75 சதவீத மானியத்தில் ரூ.1,06,800/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஆறாயிரத்து எண்ணூறு மட்டும்) வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் சீமைக்கருவேல் மரங்களை அகற்றி பின்னர் அந்த நிலத்தில் பயன்தரும் மரச்செடிகளை நடவு செய்து முன்னோடி விவசாயியாக திகழ்கிறார்.

இந்த ஆய்வுகளின் போது வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.ஆர்.அரிவாசன், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் திரு.தி.மோகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.வி.எஸ்.வெள்ளைச்சாமி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கோ.அண்ணாதுரை உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**